# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.225/2024 | Date | : 02-03-2026 |
| Deposition of Witness for | : **அ.சா.3** | Taluk | : |
| Name | : **திரு.செல்வகுமார்** | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.03.2026.
<u>(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான SSI திரு.சண்முககுமார், அவர்களின் கையொப்பம் எனக்கு அவருடன் பணிபுரிந்த வகையில் பரிட்சையம் என்பதால் நான் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.03.2022 ஆம் தேதி, பிற்பகல் 03.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு.சண்முககுமார், என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், காளிகவுண்டம்பாளையம் கிராமம், கூத்தாடிபாளையத்தை சேர்ந்த கோபி என்பவரின் மனைவி லாவண்யா, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.100/2022, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை, புகாருடன்

இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிவா மற்றும் பழனிசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார். (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் விஜய், சிவா, பழனிசாமி மற்றும் விபத்தில் காயமடைந்த விக்னேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி சதீஷ்குமார், த/பெ.பெருமாள் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 21.03.2022 ஆம் தேதி, மாலை சுமார் 06.00 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர், கடந்த 21-03-2022 ம் தேதி, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 46 F 8561 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனம் மற்றும் கடந்த 06-04-2022 ம் தேதி, விபத்திற்குள்ளான TN 30 BP 3369 என்ற பதிவு எண் கொண்ட Pulsar இருசக்கர வாகனம் ஆகியவற்றை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.புஷ்பா என்பவரை கடந்த 08-

04-2022ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றேன். (**TN 46 F 8561 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனம் மற்றும் TN 30 BP 3369 என்ற பதிவு எண் கொண்ட Pulsar இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த விஜய், என்பவருக்கு சிகிச்சை அளித்த சேலம் விம்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சிவா ரெசிடெண்ட் என்பவரையும் மற்றும் அன்றைய தினமே, கோவை கங்கா மருத்துவமனை சென்று விபத்தில் காயமடைந்த விக்னேஷ், என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் குமரன், என்பவரையும் விசாரித்து விபத்து பதிவேடு அறிக்கைகள் மற்றும் காயச்சான்றுகள் பெற்று மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**விஜய், விக்னேஷ் ஆகியோரின் விபத்து பதிவேட்டு அறிக்கைகள் மற்றும் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.10 வரையாக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், விஜய், விக்னேஷ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்றுகள் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச- பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 (2 Counts) இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 (2 Counts) இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Selvakumar